முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1490

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.10.2023**, சனிக்கிழமை

1. ஓங்காரமே ஞான சொரூபமே
ஓங்காரமே ஞானச் சுடரே
ஓங்காரனாய் இந்தஉலகில் அவதாரம் எடுத்து
உயர்வான சேவையாற்றுகின்ற எந்தன் அரங்கனே

2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள், 28.10.2023, சனிக்கிழமை)
வரங்களாக என்றும் அரங்கனோடு வடிவேலன் யான்இருந்து அற்புதம்நடத்த
அறங்கள் பெருக்கி உலகோர் தர்மவழி ஆசான் அரங்கன் தொடர்புகூட்டி வருதல்காண

3. வருபவர்க்கெல்லாம் ஆறுமுகன் என்காட்சி
வல்லமைபட இந்தபிறவியிலே சித்திக்கும்
பெருமைகொண்டு அரங்கன் தர்மத்தை
பேருலகமெங்கும் பரப்புகின்ற அன்பர்கட்கெல்லாம்

4. எல்லோருக்கும் இனிபிறவாத பெரும்பேறு
இலகுவாய் அரங்கன் ஆசிவழி தந்தருள்வேன்
அருளவே அரங்கன் தொடர்புகூட்டி
அற்புதம்பட அன்னதான சேவையாற்றி

5. வரமென உலகில் தொடர்ந்து வந்தால்
வையகத்தில் தர்மபலம் உலகெலாம் பெருகி
பெருகியே இந்த பேருலகம்
பிரணவ சித்திமிகு ஞானஉலகமாக

6. சரவணச் சுடரே ஆளுகின்ற
சாற்றிடுவேன் சத்திய ஜோதி அமைப்பின் தலைமைகொண்ட
கொண்டநல் ஞான பூமியாக
குறையில்லா ஞான ஆட்சிக்காலமாக மாற்றம்பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–